**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண்.132/2021**

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வா.சா. 2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. S. சரண்யா, எம்.எல்., சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஸ்ரீதரன் | த/பெ.: | பிச்சை |
| கிராமம்: | | தாலுக்கா: | |
| மதம்: | | தொழில்: | |
| வயது: | | முகவரி: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 22.07.2022

**வா.சா.2 ன் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் வழக்கின் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணமாக ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடன் உறுதி சீட்டில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாரிதாஸ் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்.